DEPOSITION OF WITNESS

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, POLLACHI

Case No. CC 325/2023

Prosecution Witness 2

| | | | |
|---|---|---|---|
| Name | : ஆராத்தாள் | Caste | : |
| Father's Name/ Husband's Name | : க/பெ.சதீஷ் | Calling | : |
| Village | : ஜோதிநகர். பொள்ளாச்சி | Religion | : |
| Taluk | : | Age | : 31 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969) on the 30th day of May 2025.

(Accused present.)

முதல் விசாரணை :

1. நான் தற்போது ஜோதிநகர், பொள்ளாச்சியில் குடியிருக்கிறேன். நான் ஹவுஸ் கீப்பிங் வேலை பார்க்கிறேன். அசா 1 எனது அம்மா. கடந்த 29.03.2023 அன்று நான் ஜோதிநகரில் உள்ள விநாயகர் கோவில் வீதியில் உள்ள சி காலனியில் உள்ள வீட்டில் நான் வாடகைக்கு குடியிருந்தேன். 29.03.2023 அன்று இரவு சுமார் 09.30 மணியளவில் எனது இரண்டு குழந்தைகளும் உறங்கிக் கொண்டிருந்தார்கள். நானும் என்னுடைய அக்கா மற்றும் அம்மா ஆகியோர் பேசிக்கொண்டிருந்தோம். போனில் என்னுடைய அண்ணன் குழந்தையை நாங்கள் மூவரும் திட்டிக்கொண்டு இருந்தோம்.

2 அதன்பிறகு கேட் தட்டும் சத்தம் கேட்டது. எதிரி மது அருந்திவிட்டு கேட்டை தட்டி ஆபாசமான வார்த்தையான் தேவிடியா கண்டாராழி முண்ட கதவை திறங்க டீ என்று சத்தமாக பேசிக்கொண்டு இருந்தார். என்னுடைய அம்மா இரும்பு கேட்டை திறந்தார். அப்போது எனது சகோதரியும் உடன் இருந்தார். கதவை திறந்தவுடன் எதிரி அருவாளை வீசினார். என்னுடைய அம்மா தடுத்தபோது அவரது வலது கையில் வெட்டு விழுந்தது. அவர் ஓடும்போது இடது முதுகில் வெட்டு பட்டது. சத்தம்கேட்டு அனைவரும் வந்துவிட்டார்கள். நான் போலீசாருக்கு தகவல் கொடுத்தேன். அதன்பிறகு அரசு மருத்துவமனைக்கு சிகிக்சைக்காக அம்மாவை அழைத்து

சென்றோம்., எதிரி அருவாளை போட்டுவிட்டு ஓடிவிட்டார். இரண்டு நாட்கள் எனது அம்மா உள்நோயாளியாகசிகிக்சை எடுத்துக்கொண்டார். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:

3. எதிரி கேட்டை தட்டும்போது கையில் அருவாள் வைத்திருந்தார் என்றால் சரிதான். முதலில் யார் கேட்டை திறந்தார்கள் என்றார் என்னுடைய அம்மா திறந்தார். யார் என்னுடைய அம்மாவுடன் இருந்தார் என்றால் எனது சகோதரி அம்பிகா என்பவர் இருந்தார். என்ன கூறிக்கொண்டு எதிரி கேட்டை தட்டினார் என்றால் ஆபாசமான வார்த்தைகளை பேசி ஏன் இவ்வளவு சத்தமாக பேசுகிறீர்கள் என்றுகேட்டார். போனில் நாங்கள் பேசுகிறோம் உங்களுக்கு என்ன என்று கேட்டபோது மீண்டும் ஆபாசமாக பேசினார்.

4. அருவாளால் எதிரி வெட்ட வரும்போது யார் முதலில் தடுத்தார்கள் என்றால் எனது அம்மா முதலில் தடுத்தார். சத்தம்கேட்டவுடன் அந்த பகுதியில் வசிக்கும் நப்ர்கள் சுமார் 15 பேர் கூடியிருப்பார்களா என்றால் அங்கு வந்துவிட்டார்கள். பொது மக்கள் வந்தவுடன் எதிரி அருவாளுடன் தப்பி சென்றுவிட்டார் என்றால் சரியல்ல். அருவாளை மறைத்து வைத்துவிட்டு தப்பி சென்றுவிட்டார். எதிரி அருவாளை மறைத்து வைத்த இடம் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. எதிரி என் அம்மாவை வெட்டியதாக கூறப்படும் அருவாள் எத்தனை அடி இருக்கும் என்றால் சுமாா 2 அடி இருக்கும்.

5. அந்த அருவாளில் கைப்பிடியில் எந்ந நிறத்தில் பெயிண்ட் அடிக்கப்பட்டு இருந்தது என்றால் அதை நான் பார்க்கவில்லை. எனக்கு கைப்பிடியின் நிறம் தெரியாது என்பதால் அந்த அருவாளை பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட இயலும் என்றால் சரியல்ல என்னால் அடையாளம் காட்ட முடியும். அருவாள் வெட்டக்கூடிய தன்மை இல்லாத நிலையில் இருந்தது என்றால் சரியல்ல.

6. எதிரி வீட்டின் கேட்டை தட்டும்போது நிலக்கதவு பூட்டப்பட்டு இருந்ததா என்றால் சாதாரணமாக கதவு மூடப்பட்டு இருந்தது. சம்பவத்திற்குபிறகு எவ்வாறு அசா 1ஐ மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம் என்றால் ஆட்டோவில் ஏற்றி

சென்றோம். சம்பவத்தினால் என்னுடைய அம்மாவிற்கு 2 இடத்தில் காயம் மற்றும் எலும்பு முறிவு ஏற்பட்டதா என்றால் சரிதான். மருத்துவமனையில் எலும்பு முறிவுக்கு சிகிச்சை எடுக்கப்பட்டது என்றால் சரிதான். மருத்துவமனையில் எனது அம்மாவை அனுமதித்தபோது நேரம் என்ன இருக்கும் என்றால் இரவு சுமார் 10 மணி இருக்கும். போலீசார் எங்கு வந்தார்கள் என்றால் சம்வத்தை கேள்விப்பட்டு சம்பவ இடத்திற்கு வந்தார்கள். போலீசாருக்கு யார் தகவல் கொடுத்தார்கள் என்றால் வேறு நபர்கள் தகவல் கொடுத்தார்கள். நான மயக்கமடைந்துவிட்டேன். எதிரி ஓடி வருவதை பார்த்து நான் வீட்டிற்குள் மயக்கமடைந்தேன் என்றால் சரிதான்.

7. நான் தற்போது சாட்சியமாக கூறியதைதான் போலீசாரிடமும் கூறினேன் என்றால் சரிதான். புகார் எங்கு வைத்து கொடுிக்கப்பட்டது என்றால் அரசு மருத்துவமனையில் வைத்து கொடுக்கப்பட்டது. போலீசார் எழுதிக்கொண்டு வந்த காகிதத்தில் என்னுடைய அம்மா ரேகை வைத்தார் என்றால் சரிதான். நான் கூறுவதுபோல் சம்பவம் உண்மையில் நடைபெறவில்லை என்றும் அசா1 எனது அம்மா என்பதால் அவருக்கு அனுசரனையாக நீதிமன்றத்தில் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை: இல்லை.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(Sd/J.Saravanakumar)
Judicial Magistrate No.I,
Pollachi.